# அடையாளம் காணல், இட ஒதுக்கீட்டு மற்றும் மதிப்பாய்வுக் குழு (IPRC): IPRC கூட்டத்திற்கான 5 படிகள்

கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூடுதல் ஆதரவு தேவைப்படும் மாணவர்களை அடையாளம் காண்பதற்கான ஐந்து விதிவிலக்கு வகைகளைக் கல்விச் சட்டம் வரையறை செய்துள்ளது:

- நடத்தை சார்ந்தது,
- தொடர்பாடல் சார்ந்தது
- அறிவு சார்ந்தது
- உடல் சார்ந்தது
- பல விதிவிலக்குகள்

## 1. தேவையை அடையாளம் காணுதல்

- அளவுகோல்கள்: உங்கள் குழந்தை விதிவிலக்கானவர் என்பதற்கான அளவுகோல்களை பூர்த்தி செய்கிறாரா?
- ஆதரவு: அவருடைய கற்றலுக்குகூடுதல் ஆதரவு தேவையா?

## 2. IPRC - கூட்டத்திற்கான கோரிக்கை

- யார் கோரலாம்? அதிபர், பள்ளிக் குழு உறுப்பினர், நீங்கள் (பராமரிப்பாளர்கள்) அல்லது 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள்.
- கோருவது எப்படி? எழுத்துப்பூர்வ கோரிக்கையை அதிபரிடம்சமர்ப்பிக்கவும்.
- பதில்: பள்ளிவாரியத்தின் சிறப்புக் கல்விக்கான வழிகாட்டியுடன் தோராயமான சந்திப்பு தேதியைக் குறிப்பிட்டு ஒரு பதில் உங்களுக்கு 15 நாட்களுக்குள் கிடைக்கும்.
- அறிவிப்பு: கூட்டத்திற்கு குறைந்தது 10 நாட்களுக்கு முன்னதாக நீங்கள் அறிவிப்பைப்பெற வேண்டும்
- மீளத்திட்டமிடல் : உங்களால் கலந்துகொள்ள முடியாவிட்டால், மீண்டும் திட்டமிடுமாறு கோருங்கள்.

## 3. IPRC கூட்டத்திற்கு தயாராகுதல்

- அறிந்துகொள்ளுங்கள்: சிறப்புக் கல்விக்கான வழிகாட்டியையும் கிடைக்கக்கூடிய விருப்பத்தேர்வுகளையும் மதிப்பாய்வு செய்யுங்கள்.
- மதிப்பாய்வு செய்யுங்கள்: கடந்தகால IEP -கள், IPRC முடிவுகள் (IPRC மதிப்பாய்வுக்காக) மற்றும் மதிப்பீடுகளைப் பார்க்கவும்.
- தொகுக்கவும்: உங்கள் பிள்ளை பற்றிய பகிர்ந்துகொள்வதற்கான தகவல்களை முன்கூட்டியே சேகரியுங்கள்.
- விசாரியுங்கள்: உங்களுக்கு ஏதேனும் கேள்விகள்இருந்தால் அவற்றைப் பட்டியலிடுங்கள்.

## 4. IPRC  கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்

- வடிவம்: நேரில் அல்லது மெய்நிகர்/ஆன்லைன்.
- பங்கேற்பாளர்கள்:, ஒரு  அதிபர் உட்பட குறைந்தது 3 உறுப்பினர்கள், நீங்கள் (பராமரிப்பாளர்கள்), 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள், மற்றும் விரும்பினால் ஒரு ஆதரவு நபர். குறிப்பு: 16 வயதுக்கு மேற்பட்ட  மாணவர்கள் பங்கேற்க அழைக்கப்படுவார்கள், எவ்வாறாயினும், எந்த வயது மாணவரும் கலந்துகொள்ளலாம்!
- நோக்கம்: உங்கள் குழந்தையின் ஆதரவுமற்றும் கற்றல் தேவைகளுக்குஏற்ற சிறந்த முடிவுகளைஎடுக்கத் தகவல்களைப்பகிர்ந்துகொள்ளுதல்.

## 5. IPRC -இன் முடிவுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் அடுத்த படிகள்

- முடிவுகள்: அடையாளம் காணுதல் மற்றும் வகுப்பறை இட ஒதுக்கீடு பற்றிய முடிவுகள் எடுக்கப்படும்.
- உடன்படுதல்: நீங்கள் உடன்பட்டால், முடிவில் கையெழுத்திடுங்கள். கையொப்பமிடுவதற்கு முன் மதிப்பாய்வு செய்ய நீங்கள் அதை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். பின்னர் தனிப்பட்ட கல்வித் திட்டத்தை (IEP) உருவாக்க பள்ளிக் குழுவிற்கு 30 நாட்கள் உள்ளன.
- உடன்பாடின்மை: நீங்கள் உடன்படவில்லை என்றால், முடிவில் கையெழுத்திட வேண்டாம். நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய முடியும்:
    - உங்கள் பிரச்சனைகளைப் பகிர்ந்துகொண்டு கேள்விகளைக் கேளுங்கள்.
    - 2 ஆது IPRC சந்திப்பு ஒன்றைக் கோருங்கள்.
    - IPRC முடிவுக்கு எதிராக மேல்முறையீடுசெய்யுங்கள்.

கூடுதல் கற்றல் தேவைகள் உள்ளதாக அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்கு, பல்வேறு வகுப்பறை இட ஒதுக்கீடுகள் உள்ளன, அவற்றில் பின்வருவன அடங்கும்:

- மறைமுக ஆதரவுடன்( வகுப்பாசிரியருக்கு வழிகாட்டல், திட்டமிடல் அல்லது பரிந்துரைகள் கிடைக்கும்) வழக்கமான வகுப்பு
- வழக்கமான வகுப்பபில் படித்து, பகுதி நேரத்தில் வகுப்பிலிருந்து வெளியே அழைத்து கூடுதல் ஆதரவு அல்லது சிறப்பு கற்றல் வழங்கப்படும்.
- முழுநேர சிறப்பு கல்வி வகுப்பு
- வள உதவியுடன் வழக்கமான வகுப்பு
- பகுதி ஒருங்கிணைப்புடன் கூடிய சிறப்பு கல்வி வகுப்பு

ஒவ்வொரு பள்ளி வாரியமும் வித்தியாசமானது! இணையதளத்தைப் பார்வையிடுங்கள், சிறப்புக் கல்வி வழிகாட்டியைப் படியுங்கள், மேலும் அறியப் பள்ளிக் குழுவுடன் பேசுங்கள்.

IEP -களைப் பற்றி மேலும் அறிய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது பார்வையிடவும்:
https://bit.ly/School-Supports

AutismONTARIO